# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 22 ISSUE 02 FEBRUARY -2022 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-



## வாங்குவதற்கும் விற்பதற்கும் இதுவா காலம்?

# ஆசிரியர் உரை

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். எபி 12:1 சொல்லுகிறது ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் என்ற வார்த்தையின்படி நம்மை சூழ்ந்து நிற்கின்ற கார்மேகங்கள், கொடிய கொள்ளைநோய்கள் யாவற்றையும் உதறித்தள்ளி விட்டு விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாகிய அவரை நோக்கி நின்றுவிடாமல், ஸ்தம்பித்துவிடாமல் ஓடக்கடவோம். சூழ்நிலைகள் தேசத்தில் எப்படிபட்டதாயிருந்தாலும் கர்த்தர் நம் பட்சத்தில் இருக்கிறார். தொடர்ந்து நாம் சூழ்நிலைகள் மாறப் போராடி ஜெபிப்போம். கடந்த ஜனவரி 1-ஆம் தேதி நடைபெற்ற புத்தாண்டு ஆசீர்வாதக் கூட்டம் மிகுந்த ஆசீர்வாதமாக நடைபெற்றது. எவ்வளவு மழை அடித்தாலும் அங்கு தடையின்றி கூட்டம் நடத்த தேவன் கிருபை செய்தார். தொடர்ந்து எல்லாக் கூட்டங்களும் இனி ஆன்லைனில் ஒளிபரப்பு செய்யப்படும். தேவனுடைய கிருபையினால் திங்கள் முதல் வெள்ளி வரை நடைபெறுகிற நம்முடைய கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் நிகழ்ச்சி மிகுந்த ஆசீர்வாதமாக நடைபெறுகிறது. **நம்முடைய மாத இதழ் இனி முழுமையாக கலரில் அச்சடிப்பதால் வாசிக்கின்ற உங்களுக்கு அது மிகுந்த உதவியாக இருக்கும், தொடர்ந்து அது தடையில்லாமல் நடைபெற ஜெபியுங்கள்.** மட்டுமல்ல உங்கள் உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்பி ஊழியத்தை தாங்குங்கள். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



அன்புடன் உங்கள் சகோதரர்

L. Vincent Raj

(சகோ. L .வின்சென்ட்ராஜ்)



# வாங்குவதற்கும் விற்பதற்கும் இதுவா காலம்?



(சகோ. L .வின்சென்ட்ராஜ்)

லோத்தினுடைய நாட்களில் நடந்தது போலவும் நடக்கும், ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள். லூக்கா 17:28.

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கர்த்தர் தாமே இந்த செய்தியின் மூலமாக உங்களோடு இடைபடுவாராக. நாம் வாழும் இந்த கடைசி காலத்தில் நம்பிக்கையற்ற இந்த உலகத்தில், கொடிய கொள்ளைநோயால் மனிதனுடைய கட்டுப்பாட்டை இழந்த, ஊசலாடிக் கொண்டிருக்கிற இந்த உலகில், தேவனுடைய வார்த்தை மாத்திரமே நமக்கு ஆறுதல். வானமும், பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தையோ ஒழிந்து போவதில்லை என்று இயேசு சொன்னார். அப்படிச் சொன்ன இந்த வார்த்தைகளை நாம் கூர்ந்து கவனித்து அதிலே நடக்க, நாம் செவி கொடுத்தால் நிச்சயமாக நாம் பிழைப்போம், வாழ்வோம். ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்த போது பல போதனைகள், பிரசங்கங் களைச் செய்தார். நடந்தவை, நடந்து கொண்டிருப்பவை, இனி நடக்கப்போகின்ற, சம்பவிக்கப் போகின்ற காரியங்களை நமக்கு பிரசங்கித்தார். அப்படி பிரசங்கித்தப் போதனைகளில் ஒன்று தான் லோத்தின் நாட்கள். லோத்தின் நாட்கள் செல்வ செழிப்பாய் வாழ்ந்த நாட்கள். காரணம் அவன் ஆபிரகாமை விட்டு பிரிந்து போனபோது பொன் விளையும் பூமியையும், வசதி வாய்ப்பு உள்ள இடங்களையும் தெரிந்துகொண்டார். ஜனங்கள் சுகபோக பிரியர்களாய் வசதி வாய்ப்புகளை தங்களுக்கு என்று பெருக்கிக் கொண்டார்கள். உண்டார்கள், குடித்தார்கள், புசித்தார்கள், வாங்கினார்கள், விற்றார்கள்,கட்டினார்கள். செல்வ செழிப்பாய் வாழ்ந்த நகரம் ஒரே நாளில் தேவனுடைய கோபத்திற்கு உள்ளாகி, பாவத்தின் கொடூரம் கட்டுப்படுத்த முடியாமல் போனபடியால் தேவகோபம் அவர்கள் மேல் இறங்கியது. நடந்தது என்ன? வானத்திலிருந்து கந்தகமும், நெருப்பும் இறங்கி அந்த சோதோம் கொமோரா பட்டணங்களை அழித்துப்போட்டது. மனிதனுடைய பல நாள், பல வருஷங்களின் வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வந்தது. அதில் தப்பிய ஒரே ஒரு குடும்பம் லோத்துவும், அவனுடைய இரண்டு மகள்களும் தான். தன் மனைவியை கூட காப்பாற்ற முடியாமல் போனான். காரணம் உன் ஜீவன் தப்ப ஓடு திரும்பி பார்க்காதே என்று தேவன் எச்சரித்தார். ஆனால் லோத்தின் மனைவியோ அதை

அசட்டைபண்ணி திரும்பிப் பார்த்து உப்பு தூணாய் மாறிவிட்டாள். தன் ஜீவனை இழந்து போனாள். இயேசு சொன்னார் லூக்கா 17:31-ல் அந்த நாளிலே வீட்டின் மேலிருப்பவன் வீட்டிலுள்ள தன் பண்டங்களை எடுத்துக்கொண்டு போக இறங்காமல் இருக்கக்கடவன், அப்படியே வயலிலிருக்கிறவன் பின்னிட்டுத் திரும்பாமலும் இருக்கக்கடவன் என்றார். இன்றைக்கு அதே அக்கினி கந்தகம் நிறைந்த உலகில் தான் நாம் வாழ்கிறோம். 2பேதுரு3:7-ல் இப்பொழுது இருக்கிற வானங்களும், பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது. லோத்தின் நாட்களில் எச்சரிக்கப்பட்டது போலவே இன்றைக்கும் முழு உலகத்தையும் தேவன் எச்சரித்தும், தங்கள் பொல்லாத கிரியைகளை விட்டு மனந்திரும்பி தேவனைத் தேடவும், அவருடைய இரக்கத்தை பெறவும் கட்டளையிடுகிறார்.ஆனால் ஜனங்கள் கேட்கவோ, மனந் திரும்பவோ இல்லை தங்கள் பொல்லாத கிரியைகளை

விட்டு மனம் திரும்பாமல் உண்ணவும்.குடிக்கவும். சம்பாதிக்கவும். விற்கவும். வாங்கவும். கொரோனா எப்போது முடியும் என்ன படிக்கலாம். என்ன சம்பாதிக்கலாம் என்று இதிலே சிந்தனையாய் இருந்து அழிவின் ஆபத்தை உணராமல் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். 2இராஜா5:26-ல் எலிசா தன் உடன் ஊழியக்காரன் கேயாசியைப் பார்த்து பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும், ஒலிவத்தோப்புகளையும், திராட்சத் தோட்டங்களையும் ஆடுமாடுகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா? என்றான். என் இருதயத்தில் இந்த செய்தியை எழுதும்படி தூண்டிய வார்த்தை இது தான். இது வாங்குகிறதற்கும், விற்கிறதற்கும் உண்டான காலம் அல்ல. உள்ளது போதும் அதாவது இருக்கிறதே போதும் என்று, நாம் உலகத்தின் மேல் கவனம் வைக்காமல் தேவனைப் பார்த்து ஓட நம்மை அர்ப்பணிக்க வேண்டும், வாழப்பழக வேண்டும். இதைத்தான் புதிய ஏற்பாட்டிலே யோவான் ஸ்நானகன் பிரசங்கித்தார். அவருடைய பிரசங்கத்தைக் கேட்ட ஆயக்காரர். ஜனங்கள் மற்றும் போர் சேவகர்கள் நாங்கள் என்ன செய்ய வேண்டும். இந்த இயேசுவை ஏற்றுக்கொள்ள அவரை அடைய, அநுபவிக்க என்ன செய்ய வேண்டும் என்றபோது லூக்கா 3:10 முதல் 15 முடிய உள்ள வசனத்தில் நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமலும். பொய்யாய்க் குற்றஞ்சாட்டாமலும் உங்கள் சம்பளமே போதுமென்றும் இருங்கள் என்றான்.காரணம் இனி உங்கள் காலம் குறுகியது. 1 கொரி 7:29 முதல் 31 வரை உள்ள வசனத்தில் இவ்வுலகத்தின் வேஷம் கடந்து போகிறதே என்றார். ஆகவே இனியும் நாம் காலத்தை வீணடிக்காமல் தேவன் நமக்கு தந்த ஜீவனை, இந்த கொரோனா காலத்தில் நம்மை உயிரோடே பிழைக்க வைத்த, வாழவைத்த ஆண்டவராகிய இயேசுவுக்காக வாழவும். ஜீவிக்கவும் நம்மை அர்ப்பணித்து நம் ஜீவனை இரட்சிக்க. வரும் கோபாக்கினைக்கு நாம் தப்புவிக்கப்பட நமக்கு கிருபையாய் கொடுக்கப்பட்ட காலங்களையும், நேரங்களையும் சரியாய் பயன்படுத்தி.தேவையில்லாத காரியங்களில் ஈடுபடாமல் உள்ளது போதும் என்ற, மனநிறைவோடு தேவனைப் பின்பற்றி.இது வாங்குகிறதற்கும் விற்கிறதற்கும் காலம் அல்ல என்பதை உணர்ந்து நடக்கவேண்டும். அதைத்தான் இயேசு லூக்கா 17:28-ல் லோத்தின் நாட்களில் நடந்தது போலவும் நடக்கும். ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள் நட்டார்கள், கட்டினார்கள் என்றார். இது விற்கிற காலம் அல்ல, வாங்குகிற காலமும் அல்ல. கடன் வாங்கி மாதம் மாதம் தவணை கட்டுவதற்காக இரவும், பகலும் உழைத்து, பிள்ளைகளை மறந்து, குடும்பத்தை மறந்து நாடு விட்டு நாடு போய் சரியான சாப்பாடு இல்லாமல் தங்கள் பெலத்தை வீணடித்து விசனப்படுகிற காலமும் அல்ல.

> **தேவன் அவருடைய ஜனங்களை பகைஞரின் கையிலும், கொள்ளைக்காரர் கையிலும், பெலிஸ்தரின் கையிலும் உக்கிரமான ராஜாக்கள் கையிலும் விற்றுப்போட்டார்**

ஒன்றும் இல்லாத இஸ்ரவேல் ஜனங்களை வனாந்திரத்தில் நாற்பது வருஷம் அற்புதமாய் வழி நடத்திய தேவன் உன்னை நடத்தப் போதுமானவராய் இருக்கிறார். அவர் உன் தேவைகளை சந்திப்பார். உனக்கு என்ன வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார். அவர் உன்னை அற்புதமாய் நடத்துவார்.
ஆச்சரியமான காரியங்களைச் செய்வார். போகட்டும் எதையெல்லாம் ஜனங்கள் விற்றார்கள், யாரை எல்லாம் தேவன் விற்றுப்போட்டார், நாம் இன்றைக்கு எதை வாங்க வேண்டும் என்பதை பார்க்கப் போகிறோம்.

## தேவன் ஜனங்களை விற்றுப்போட்டார்

அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலின் மேல் கோபமூண்டவராகி, அவர்கள் அப்புறம் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக்கூடாதபடி கொள்ளையிடுகிற கொள்ளைக்காரர் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்து, அவர்களைச் சுற்றிலும் இருக்கிற அவர்கள் பகைஞரின் கையிலே விற்றுப்போட்டார். நியா 2:14. மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமின் கையிலே விற்றுப் போட்டார். நியா 3:8, 4:2, 10:7-ல் பெலிஸ்தரின் கையில் விற்றுப் போட்டார். அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்துபோகிற போது அவர் அவர்களை ஆத்சோரின் சேனாபதியாகிய சிசெராவின் கையிலும், பெலிஸ்தரின் கையிலும்.மோவாபிய ராஜாவின் கையிலும் விற்றுப்போட்டார் 1சாமு 12:9. மேற்சொன்ன வசனங்களில் எல்லாம் தேவகோபம் ஜனங்களின் மேல் வரும்போது எல்லாம், ஜனங்கள் தேவகோபத்திற்கு ஆளானபோது எல்லாம், தேவன் அவருடைய ஜனங்களை பகைஞரின் கையிலும், கொள்ளைக்காரர் கையிலும், பெலிஸ்தரின் கையிலும் உக்கிரமான ராஜாக்கள் கையிலும் விற்றுப்போட்டார். அவர்கள் ஜனங்களை அடிமைப்படுத்தி, நாடுகடத்தி, அவர்களுடைய உடமைகளை அபகரித்து. சித்தரவதை செய்து வேதனைப்படுத்தினார்கள். ஜனங்கள் எவ்வளவு சம்பாதித்தும், உழைத்தும் முன்னேற முடியாமல் கசக்கி பிழியப்பட்டார்கள். காரணம் ஜனங்கள் கர்த்தரைத் தேடாமல், அவர் நியமித்த வழிகளில் வாழாமல் முரட்டாட்டமாய், இருதயக்கடினத்தோடு உலகத்தை அநுபவிக்க வேண்டும், நாகரீகத்தை அனுபவிக்க வேண்டும், பணம் சம்பாதிக்க வேண்டும், வீடு வாசல்களை, நகைகளை சேர்த்து வைக்க வேண்டும் என்று இரவும் பகலும் இம்மைக்குறியவைகளையே சிந்தித்து தேவனுக்கு ஏற்றவைகளை சிந்திக்காமல், மனிதனுக்கு ஏற்றவைகளையே சிந்தித்து, மாம்சசிந்தையினாலே தேவனுக்கு பகைவராக, சத்துருவாக மாறிவிட்டார்கள். எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களாக மாறிவிட்டார்கள். அதனால் தேவ கோபம் உண்டாகி தேவன் அவர்களை சீர்கேடுகளுக்கும், உலகத்தின் காரியங்களைச் செய்ய விற்றுப் போட்டார், மறந்துபோனார். அதனால் தான் இந்த ஜனங்கள் மேல் தேவகோபம் எழும்பியிருக்கிறது. யோவான் 3:36-ல் தேவனுடைய கோபம் அவர்கள் மேல் நிலை நிற்கும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஏன் வேசித்தனங்கள், ஏன் விபச்சாரங்கள், ஏன் குடிவெறிகள், ஏன் தாறுமாறான வாழ்க்கைகள் நீதிமொழி 22:14-ல் பரஸ்திரீகளின் வாய் ஆழமான படுகுழி. கர்த்தருடைய கோபத்திற்கு ஏதுவானவன் அதிலே விழுவான். அதினால் தான் அநேகர் வேசித்தனத்தில் விழுந்து தங்கள் சரீரங்களை, தேவனுடைய ஆலயத்தை, மகிமையின் ஆலயத்தை விற்றுப்போடுகிறார்கள். இன்றைக்கு அவர்களுடைய இருதயம், உள்ளம், சரீரம் கள்வர் குகையாக மாறி ஜெபிக்க முடியாமல், துதிக்க முடியாமல், தேவனுடைய பிரசன்னத்தை அனுபவிக்க முடியாமல், தேவ சமூகத்திலிருந்து துரத்தப்பட்டு, ஆதாம் ஏவாளைப் போல் மகிமையை சாத்தானுக்கு விற்றுப் போட்டார்கள். சொல்லப்போனால் தேவன் மனிதர்களை விற்பதற்கு முன்னதாக ஜனங்கள் தங்களை சாத்தானுக்கு விற்றுப்போட்டார்கள், அடிமையானார்கள். தங்களை சாத்தானுக்கு விற்றுப்போட்டார்கள், அடிமையானார்கள். இதனால் தான் உலகம் தேவகோபத்திற்கு



உள்ளாகி இருக்கிறது. கொடிய கொள்ளை நோய்களும், காட்டுத் தீக்களும், பூமி அதிர்ச்சிகளும் உண்டாயிருக்கிறது. இவ்வளவு நடந்தும், அடிவாங்கியும் யாரும் தங்களைத் தாழ்த்தி, தேவனை தேடுவதிலோ, பொல்லாத வழிகளை விடுவதிலோ ஆர்வம் இல்லை. அதினால் தேவன் துன்மார்க்கரின் கையிலும், கொள்ளைக்காரர்கள் கையிலும் அவர்களை விற்றுப்போட்டார். எங்கே உன் விஞ்ஞானம், எங்கே உன் அணுஆயுதம், எங்கே உன் படிப்பு மீண்டு வா பார்ப்போம். அவைகள் உன்னை தப்புவிக்குமா? பார்ப்போம் என்று காத்திருக்கிறார். இந்த நிலையில் யார் ஒருவர் தன்னைத்தாழ்த்தி தேவனைத்தேடி, அவர் இரக்கத்திற்காக கெஞ்சுகிறானோ அவன் மீட்கப்படுவான், திரும்ப நிலைநாட்டப்படுவான். இயேசு சொன்னார் மத்தேயு 13:44 முதல் 46-ல் அன்றியும்,
பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் கண்டு மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான். ஒருவன் விலையுயர்ந்த முத்தைக் கண்டு போய் தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று அதைக் கொள்ளுகிறான் என்றார். தனக்கு லாபமாய் இருந்த, தனக்கு வசதியாய், மேன்மையாய் இருந்த எல்லாவற்றையும், படிப்பு, அந்தஸ்து, வசதிவாய்ப்பு சொத்து, பதவி எல்லாவற்றையும் அப்போஸ்தலனாகிய பவுல் நஷ்டமென்று எண்ணி ஒப்பற்ற செல்வமாகிய பொக்கிஷத்தை, இயேசுவை, விலையேறப் பெற்றவரை பின்பற்றினான். தனக்கு லாபமாயிருந்த அனைத்தையும் நஷ்டமென்று எண்ணினான்.தனக்கு உண்டான ஆஸ்தி,

ஐசுவரியம் எல்லாவற்றையும் விற்று இயேசுவை இயேசுவை அவன் வாங்கிக்கொண்டான், சம்பாதித்தான், பொக்கிஷத்தைப் பெற்றுக்கொண்டான். இதைத்தான் ஆண்டவராகிய இயேசு அந்த பணக்கார வாலிபனுக்கு சொன்னார். மாற்கு 10:21,22 லூக்கா 18:22,23ல் உனக்கு உண்டான எல்லா மேன்மைகளையும், வசதிவாய்ப்புகளையும் விட்டுவிட்டு, இழந்து பின்னிட்டுப் பார்க்காமல், உனக்கு லாபமாயிருந்த அனைத்தையும் எனக்காக விட்டுவிடுவாயா? பொக்கிஷத்தைப் பெற்றுக்கொண்டான். இதைத்தான் ஆண்டவராகிய இயேசு அந்த பணக்கார வாலிபனுக்கு சொன்னார், மாற்கு 10:21,22 லூக்கா 18:22,23ல் உனக்கு உண்டான எல்லா மேன்மைகளையும், வசதிவாய்ப்புகளையும் விட்டுவிட்டு, இழந்து பின்னிட்டுப் பார்க்காமல், உனக்கு லாபமாயிருந்த அனைத்தையும் எனக்காக விட்டுவிடுவாயா? என்றார். அவனோ முக வாட்டத்தோடே திரும்பிப் போய்விட்டான். காரணம் அவனுக்கு அவ்வளவு ஆஸ்தி, சொத்துக்கள் இருந்தது. அவன் அதை விட முடியவில்லை. தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று பரலோகராஜ்யத்தை சுதந்தரிக்க முடியவில்லை. தன்னை இந்த மாயைக்கும், இம்மைக்கும் விற்றுப்போட்டான். இன்றைக்கு நாம் தேவனுடைய இரக்கத்தையும், அன்பையும் பெற்றது உண்மையானால் நம்மை விற்று, இழந்து தேவனுடைய இரத்தத்தினால் விலைகொடுத்து வாங்கப்பட்டு விடுவோம். இதை நிறைவேற்றச் செய்யத்தான் ஆண்டவராகிய இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்தார். நீங்கள் பணமுமின்றி விலையுமின்றி மீட்கப்படுவீர்கள் என்றார் ஏசாயா55:1, 1பேது1:18,19ல் உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள் என்றார். இன்றைக்கு மனம் திரும்பி உங்களை தாழ்த்தினால் மீட்கப்படுவீர்கள்.

வாங்கப்பட்டு விடுவோம். இதை நிறைவேற்றச் செய்யத்தான் ஆண்டவராகிய இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்தார். நீங்கள் பணமுமின்றி விலையுமின்றி மீட்கப்படுவீர்கள் என்றார் ஏசாயா55:1, 1பேது1:18,19ல் உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள் என்றார். இன்றைக்கு மனம் திரும்பி உங்களை தாழ்த்தினால் மீட்கப்படுவீர்கள். தேவனுடைய இரத்தத்தினால் விலைகொடுத்து வாங்கப்பெறுவீர்கள். பரலோகராஜ்யத்தின் பொக்கிஷங்களைப் பெற்றுக்கொள்வீர்கள். உங்கள் அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்படுவீர்கள். நீங்கள் இழந்து போன, நீங்கள் விற்றுப்போட்ட சகல ஆசீர்வாதங்களையும் தேவன் உங்களுக்கு திரும்பக்கொடுத்து, உன்னிலும் பலத்தவனுடைய கைகளுக்கு உங்களை மீட்டுக் காத்துக்கொள்வார், தப்புவிப்பார். அடுத்ததாக ஜனங்கள் எதை, யாரை விற்றார்கள்? என்பதைப் பார்ப்போம்

> **நீங்கள் இழந்து போன, நீங்கள் விற்றுப்போட்ட சகல ஆசீர்வாதங்களையும் தேவன் உங்களுக்கு திரும்பக்கொடுத்து, உன்னிலும் பலத்தவனுடைய கைகளுக்கு உங்களை மீட்டுக் காத்துக்கொள்வார்**

## இயேசுவை விற்ற யூதாஸ்

நான் அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள். மத்தேயு 26:15 யோசேப்பை அவன் சகோதரர்கள், அவனை இந்த இஸ்மவேலருக்கு விற்றுப்போடுவோம் வாருங்கள், நமது கை அவன்மேல் படாதிருப்பதாக. அவர்கள் யோசேப்பை அந்தக் குழியிலிருந்து தூக்கியெடுத்து, அவனை இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். ஆதி 37: 27,28. தேவன் ஜனங்களை விற்றுப்போட்டார் என்பதைப்



பார்த்தோம். ஆனால் அவரால் உண்டாக்கப்பட்ட, சிருஷ்டிக்கப்பட்ட ஜனங்கள் அவரையே விற்று, தொலைத்து விட்டார்கள். சிலர் தங்க நகைகளை ஆசைப்பட்டு வாங்கி, வீட்டிலே அதை குறித்து பெருமையாய் பேசிக்கொள்வார்கள். ஆனால் திடீரென பணத்தேவை வந்து அல்லது எதிர்பாராத செலவுகள் வந்தால் கொண்டு போய் அடகுக்கடையில் அடகு வைத்து விடுவார்கள். சில காலம் வட்டி கட்டுவார்கள். அதன் பிறகு அதையும் விட்டு விடுவார்கள். பிறகு என்ன ஆகும்? அது ஏலம் போய் விற்கப்பட்டு விடும். அதை இழந்ததுதான் மிச்சம். இன்றைக்கு அதைப்போல் சிலர் விலையேறப்பெற்ற இயேசுவை ஏற்றுக்கொள்கிறார்கள், பின்பற்று கிறார்கள். பிரச்சனை, சோதனை என்று வந்தால், உலகம், பணஆசை என்று வந்தால் இயேசுவை மறந்து வேலை வேலை என்று ஓடி பணம் பணம் என்று அலைந்து தங்கள் வீணான



வைகளுக்காகத் தங்கள் மகிமையை மாற்றிக் கொள்ளுகிறார்கள். இப்படியாகத்தான் யூதாஸ் இருந்தான். உலகத்தின் பின்னால் ஓடின அவனை இயேசு தெரிந்து கொண்டு தம்மோடு இருக்கவும், பிசாசுகளை துரத்தவும், வியாதிகளை சுகமாக்கவும், தனக்குப்பின் அவருடைய ஊழியத்தை செய்யவும் ஏற்படுத்தினார். ஆனால் பணப்பிரியனாய் இருந்தான். அவன் கையில் இருந்த பணத்தை அடிக்கடி திருடிவிடுவான். அடிக்கடி ஆண்டவராகிய இயேசுவின் மேல் எரிச்சலடைந்து, முறுமுறுத்து குற்றம் கண்டுபிடிக்கிற ஆவியோடு அலைந்தான். முடிவு என்ன, இயேசுவை பகைத்த யூதகுருக்களோடு சேர்ந்து கட்சிமாறி 30 வெள்ளிக்காசுக்கு ஆசைப்பட்டு வயல்களையும், திராட்சைத் தோட்டங்களையும், ஆடுமாடுகளையும் வாங்கி சுகபோகமாய் வாழலாம் என்று தன் மனச்சாட்சியை விற்றுப்போட்டான். பண ஆசைக்காக இயேசுவை காட்டிக்கொடுத்தான், விற்றுப்போட்டான். அவன் நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று. எவ்வளவோ கற்பனை பண்ணி உலகத்தில் ஐசுவரியவானாய் திகழலாம், முப்பது வெள்ளிக்காசு என்பது இன்றைக்கு 30 கோடிக்கு சமம். அதை வைத்து உலகத்தை அநுபவிக்கலாம் என்று நினைத்ததால் அவன் மனச்சாட்சியே அவனை வாதித்தது. தற்கொலை செய்யும்படி தூண்டிற்று.பரிசுத்தத்தை, கிருபையை, மகிமையை, வார்த்தையானவரை அவன் விற்றுப்போட்டான். உணவுக்காக, உடைக்காக, உலகத்தில் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக இயேசுவை விற்றுப்போட்டான். அதே போலத்தான் யாக்கோப்பின் பிள்ளைகள் பத்துபேர் யோசேப்பின் மேல் பொறாமை கொண்டு எங்கள் தகப்பன் எங்களை காட்டிலும் யோசேப்பை அதிகமாய் நேசிக்கிறார், அது மாத்திரமல்ல நாங்கள் செய்கிற சின்ன சின்ன தவறுகளைக் கூட தகப்பனிடத்தில் சொல்லி விடுகிறான். இவை எல்லாவற்றிற்கும் மேலாக சொப்பனங்கண்டு சூரியனும், சந்திரனும் தன்னை வணங்கும் என்றும், நாங்கள் அவனுக்கு அடிமைகள் என்று சொல்லுகிறானே இவனை ஒரு வழி பண்ணவேண்டும் என்று இயேசுவைப் போல் யோசேப்பையும் அவர்கள் இஸ்மவேலருக்கு இருபது வெள்ளிக்காசுக்கு விற்றார்கள். யோசேப்பு கைமாறி அடிக்கடி மாற்றப்பட்டு விற்கப்பட்டான்.

உண்மையில் அவர்கள் விற்றது யோசேப்பை அல்ல. அவன் தேவனுக்கு பயப்படுகிறவன் என்ற தெய்வபயத்தை விற்றார்கள். போத்திபாரின் மனைவி தவறான உறவுக்கு அழைத்த போது தேவனுக்கு விரோதமாக நான் பாவம் செய்வது எப்படி என்ற சுபாவத்தை விற்றார்கள், கர்த்தர் தன்னோடு இருந்தால் எந்த ஒரு தவறையும் செய்ய முடியாது என்ற தேவ பிரசன்னத்தைத் தான் விற்றார்கள். இன்றைக்கு பாவத்திற்காக மாயைக்காக தேவன் கொடுத்த மகிமை, கிருபை, நேரம், வாழ்க்கை எல்லாம் விற்றுபோட்ட மனிதர்கள் இருக்கிறார்கள். 1இராஜா 21:25ல் தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்டபடியே, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய, தன்னை விற்றுப்போட்ட ஆகாப்பைப்போல ஒருவனுமில்லை என்று வேதம் சொல்லுகிறது.

இன்றைக்கு பொல்லாப்பு செய்ய துணிகரமாய் தாங்கள் சுயநலத்திற்காக தங்களை விற்றுப்போடுகிற ஜனங்கள் பூமியில் பெருகிவிட்டார்கள். அப்புறம் கொரோனா வராமல் என்ன வரும். தேவகோபம் வராமல் என்ன வரும். அதனால்தான் தேசம் தண்டிக்கப்படுகிறது. அடுத்ததாக பாருங்கள் எபி 12:16 ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள் என்று

சொல்லப்பட்டுள்ளது. தன் மூத்த உரிமையை, சேஷ்டபுத்திரத்தை உணவுக்காக விற்றுப்போட்டான். பிற்பாடு அது தவறு என்று கண்ணீரோடு கதறியும் மனம் மாறுதலை காணாமல் போனான். தேவனுடைய இராஜ்யம் என்பது உணவும், உடையும் அல்ல, அது நீதி, பரிசுத்த ஆவியினால் உண்டாகும் மகிழ்ச்சி. நாம் இயேசுவுக்கு பிள்ளைகளாகும் படிக்கு, அவர் நாமத்தின் மேல் விசுவாசம் வைத்த அத்தனை பேர்களுக்கும் பிள்ளைகளாகும் அதிகாரத்தை, உரிமையை கொடுத்திருக்கிறார் யோவான் 1;12ல் சால்லப்பட்டுள்ளது. மட்டுமல்ல நாம் அவரை அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருக்கிறோம் என்று ரோமர் 8;15-ல் சொல்லப்பட்டுள்ளது.

நாம் அவருடைய பிள்ளைகள், அவருடைய பிள்ளைகளாய் வாழ இயேசு நமக்காக இரத்தம் சிந்தி நம்மை மீட்டு விலைகொடுத்து வாங்கியிருக்கிறார். மட்டுமல்ல அவருடைய பரிசுத்த ஆவியானவரை நமக்கு அனுப்பி, நிரப்பி அப்பா பிதாவே என்று உறவாடவும், அவரை கூப்பிடவும் அவருக்கு முதற்பேறானவர்களாக இருக்கவேண்டும் என்றும் நம்மை அழைத்திருக்கிறார். இதைத்தான் அவர் கெட்டக்குமாரனுடைய உவமையில் சொல்லியிருக்கிறார். ஆனால் அந்த இளையமகனோ சொத்தை எல்லாம் திரட்டிக்கொண்டு, ஊதாரியாய் வாழ்ந்து, எல்லாவற்றையும் செலவழித்து, பிள்ளை என்ற அதிகாரத்தை இழந்து, அப்பா பிதாவே என்று கூப்பிடுகிற உரிமையை இழந்து, நாடோடியாய் அலைந்து, தேவசமூகத்தை இழந்து தவித்தான். ஆனால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட தருணத்தை சரியாய் பயன்படுத்தி, புத்திதெளிந்து, தன் தகப்பனிடத்தில் திரும்பவும் வந்து, தன் பாவத்தை அறிக்கைச் செய்து, மீண்டும் மகனாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, தேவ பிரசன்னத்தோடு இணைக்கப்பட்டு, விற்றுப்போட்ட, இழந்துபோன அந்த உறவை திரும்ப ஏற்படுத்திக் கொண்டான். இன்றைக்கு இப்படிப்பட்ட சரி செய்தலைத்தான், மனம் திரும்புதலைத்தான் தேவன் விரும்புகிறார், எதிர்பார்க்கிறார். இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே இனியும் உங்களை பாவத்துக்கும், உலக மாயைக்கும் விற்றுப்போடாமல், நமக்குள் இருக்கும் இயேசுவை உலக இன்பத்திற்காக, பொல்லாப்பு செய்ய விற்றுப்போடாமல், அவரை பரிசுத்தம்பண்ணி, கனம்பண்ணி, விலையேறப் பெற்ற மகனாக, மகளாக வாழுவோம். இப்படிப்பட்ட வாழ்க்கைக்குத்தான், இந்த மேன்மையான வாழ்க்கைக்குத்தான் கர்த்தர் நம்மை அழைத்திருக்கிறார். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்களை சத்தியத்தை வாங்குகிறவர்களாக, விற்கிறவர்களாக அல்ல தேவவசனத்தைப் பெற்றுக்கொள்கிறவர்களாக மாற்றுவாராக.

**தேவனுடைய இராஜ்யம் என்பது உணவும், உடையும் அல்ல, அது நீதி, பரிசுத்த ஆவியினால் உண்டாகும் மகிழ்ச்சி.**


**வாசகர்கள் கவனத்திற்கு !**

வாசகர்கள் வசிப்பதற்கு எளிதாக நமது இயேசுவை தினம் பார்க்கிறேன் மாத இதழ் கலரில் அச்சஅடிக்கப்பட்டு வெளிவர தேவன் கிருபைசெய்தார்.

உங்கள் சந்தாவை இனி G-PAY மூலம் செலுத்தலாம் மற்றும் இந்த ஆண்டிற்கான உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.


G Pay +91 944 3009 333

**ஜெப உதவிக்கு**

1800 309 9333

+91 944 28 00 447

+91 944 28 00 449




# உன்னை மகிழ்ச்சியாக வைப்பேன்



சகோதிரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இன்றைக்கு முழுஉலகமும் உண்மையான மகிழ்ச்சியை இழந்து தவிக்கிறது. கொள்ளைநோயின் தாக்கம், மரணபயம் ஒருபக்கம், அதினிமித்தம் பொருளாதார ரீதியில் பாதிப்புகள், வேலையிழப்புகள், வருமானம் இல்லாதநிலை குடும்பங்களில் பல்வேறு விதமான பிரச்சனைகள், காரணமற்ற காயங்கள், மனஉளைச்சல்கள். துன்பத்தின் மேல் துன்பம் என்று மகிழ்ச்சியை இழந்து கண்ணீரோடும், கவலையோடும், மனத்துயரத்தோடும் கடந்து போகிற நம்மை பார்த்து ஆண்டவருடைய வேதம் உன்னை மகிழ்ச்சியாக வைப்பேன் என்று சொல்கிறதை நாம் பார்க்கிறோம். ஏசா 60:15-ல் நீ நெகிழப்பட்டதும், கைவிடப்பட்டதும், ஒருவரும் கடந்து நடவாததுமாயிருந்தாய். ஆனாலும் உன்னை நித்திய மாட்சிமையாகவும், தலைமுறை தலைமுறையாயிருக்கும் மகிழ்ச்சியாகவும் வைப்பேன் என்று ஆண்டவர் சொல்கிறார். எல்லா வகையிலும் கைவிடப்பட்டும், ஒருவராலும் விரும்பப்படாத நிலையில் இருக்கிற உன்னை தலைமுறை தலைமுறையாயிருக்கும் மாட்சிமையாகவும், மகிழ்ச்சியாகவும் வைப்பேன் என்று ஆண்டவர் சொல்வது எத்தனை சந்தோஷம். நீதிமொழி 17:22-ல் மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம், நல்ல மருந்து என்று வாசிக்கிறோம். பல்வேறு வியாதிகளில் கஷ்டப்படுகிற அநேகரை மருத்துவர்கள் உங்கள் மனதை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ளுங்கள், கவலைப்படாதிருங்கள் என்றெல்லாம் சொல்லுகிறார்கள் அல்லவா? மனஅழுத்தம் மகிழ்ச்சிக்கு எதிரானது. அதனால் தான் மகிழ்ச்சியோடிருங்கள் என்று ஆண்டவர் சொல்கிறார்.

## மகிழ்ச்சியே நம் பங்கு

எல்லா செல்வங்களையும் அதிகமாய் அனுபவித்த மனிதன் சாலமொன். தன் அனுபவத்தை சொல்கிறான் பிர 3:12,22-ல் மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில், நன்மைசெய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன் என்றும், இப்படியிருக்கிறபடியால் மனுஷன் தன் செய்கைகளில் மகிழ்ச்சியாயிருக்கும் நன்மையேயல்லாமல் வேறே நன்மை இல்லையென்று கண்டேன், இதுவே அவன் பங்கு என்கிறான். பிர 5:18,19-லும் இதோ, உயிரோடிருக்கும்படி தேவன் அருளிச்செய்த நாளெல்லாம் மனுஷன் புசித்துக் குடித்து, சூரியனுக்குக் கீழே தான் படும் பிரயாசம் அனைத்தின் பலனையும் அநுபவிப்பதே நலமும் உத்தமுமான காரியமென்று நான் கண்டேன், இதுவே அவன் பங்கு. தேவன் ஐசுவரியத்தையும், சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கைப் பெறவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகம். பக்தன் எஸ்றா ஜனங்களுக்கு முன்பாக நியாயப்பிரமாணப் புத்தகம் கொண்டு வந்து வாசிக்கப்பட்டு, ஜனங்கள் அழுதபோது நெகே 8:10-ல் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான். மகிழ்ச்சியாயிருப்பதே நம் பங்கு, மகிழ்ச்சியாயிருப்பதே நம் பெலன். எங்கே நான் மகிழ்ச்சியாயிருக்க முடிகிறது. ஒன்று போனால் ஒன்று, பாடுகள் பெருகிக் கொண்டேயிருக்கிறது. நான் எங்கே மகிழ்ச்சியாயிருப்பது என்கிறீர்களா?

நாம் நம்முடைய காரியங்களை, நமக்கு நடந்தவைகளை எண்ணி கவலைப்படவும், சோர்ந்துபோகவும் முடியும், நமக்கு உரிமையும் உண்டு. ஆனால் அவைகளை மாற்றி அமைக்கிற தேவன் இருக்கிறார். அவரில் நாம் மகிழ்ந்திருந்தால் அதுதான் நம் பெலன். இந்த மகிழ்ச்சியினால் தேவன் நம்மை நிரப்புவார். இதுவரை பாடுபட்டு, நெகிழப்பட்டு, கைவிடப்பட்டு நொறுங்கிப்போயிருக்கிற நம் வாழ்வை அவர் மகிழ்ச்சியாய் வைப்பேன் என்கிறார். என் வேதனை நீங்கும், தேவன் என்னை மகிழ்ச்சியாய் வைப்பார் என்று விசுவாசியுங்கள். எப்படி இந்த மகிழ்ச்சியை நமக்குத் தருகிறார் என்று பார்ப்போம்.

## மனம் திரும்பும்போது மகிழ்ச்சி

தகப்பன், மகன் உவமையை இயேசு பேசும்போது தகப்பனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். இளையவன் ஆஸ்தியை பிரித்து வாங்கிக்கொண்டு தூரதேசம் போய் அழித்து விட்டு, ஒன்றும் இல்லாதவனாய் மனம்திரும்பி வந்த போது அவனைக் கட்டி அணைத்துக்கொண்டு கைக்கு மோதிரம், காலுக்குப் பாதரட்சை, சிறந்த வஸ்திரம், கொழுத்தக்கன்று அடித்து விருந்து கொண்டாடினார். லூக் 15:32-ல் இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான். காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான். ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் என்று தகப்பன் சொல்கிறார். குடும்பத்தாருக்க மட்டும் மகிழ்ச்சியல்ல, அவனுக்கே எவ்வளவு சந்தோஷம் வந்திருக்கும். எப்படி கிடைத்தது?, தகப்பனே உமக்கு முன்பாகவும், பரத்துக்கு விரோதமாகவும் நான் பாவம் செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று தன் பாவத்தை உணர்ந்து, நான் குற்றம் செய்தேன் என்று செல்லும்போது, எனக்கு தகுதியில்லை என்று உணரும் போதுதான், தகப்பன் அன்போடு ஏற்றுக் கொண்டான். அதனால் தான் அந்த மகிழ்ச்சி அவனுக்கு



உண்டானது. நாமும் கூட இந்த விதமான மகிழ்ச்சியை அனுபவித்ததுண்டா? உண்மையான மனவருத்தம், தாழ்மையான சிந்தை நம்மிடத்தில் உண்டா? அவ்வப்போது நம்மில் எழும்பும் பாவநிலையை ஆண்டவரிடம் சொல்லி இரக்கம் பெறுகிறோமா? அப்படியானால் மகிழ்ச்சி நம் உள்ளத்தில் நிலைத்திருக்கும். நாம் இதை செய்யாவிட்டால் நம் பாவநிலை சீழ்பிடித்து, குற்றமனசாட்சியை கொடுத்து, துக்கமாய் நம்மை வாழச்செய்யும். எனவே சின்ன தவறோ, பெரிய தவறோ இயேசுவிடம் வந்து சொல்லி அறிக்கையிட்டு மனம் திரும்பும்போது இந்த மகிழ்ச்சி உண்டாகிறது.

## பாடும் போது மகிழ்ச்சி


அப்படி மீட்கப்பட்டவர், இரட்சிக்கப்பட்ட பின் சந்தோஷத்தைப் பெறுகிறோம். ஏசாயா 35:10-ல் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்கு வருவார்கள், நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும், சந்தோஷமும், மகிழ்ச்சியும் அடைவார்கள். சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். ஏசா 51:11-லும் இதையே வாசிக்கிறோம். நாம் கர்த்தரைத் துதித்துப் பாடும்போது ஒரு பெரிய மகிழ்ச்சி உண்டாகிறது. இது அநேகருக்கு தெரியவில்லை. தெரிந்த நம்மில் அநேகர் அதை செய்ய மறந்து போகிறோம். அதினால் மகிழ்ச்சியை இழந்து, விடுதலையில்லாமல் துக்கத்தோடு வாழ்கிறோம். பாடித்துதிப்பதால் சங்கிலிகள், விலங்குகள் உடைகிறது. அடைபட்ட கதவுகள் திறக்கிறது. எதிரிகள் தங்களுக்குள் வெட்டுண்டு மடிந்து போகிறார்கள்.1 நாளா 15:16-ல் தாவீது லேவியரின் பிரபுக்களை நோக்கி, நீங்கள் உங்கள் சகோதரராகிய பாடகரைத் தம்புரு, சுரமண்டலம், கைத்தாளம் முதலிய கீதவாத்தியங்கள் முழங்க, தங்கள் சத்தத்தை உயர்த்தி, சந்தோஷம் உண்டாகப் பாடும்படி நிறுத்த வேண்டும் என்று சொன்னான். அப்படியே அவர்கள் பாடும்போது கர்த்தருடைய வார்த்தைகள் நிறைந்த பெட்டி ஓபேத்ஏதோமின் வீட்டிலிருந்து மகிழ்ச்சியோடு கொண்டு வரப்பட்டது. இதற்கு முன்னாக கர்த்தருடையப் பெட்டியை அவர்களால் கொண்டு வரமுடியவில்லை.



பல அடிகள், ஏமாற்றங்கள், தோல்விகள் இவைகள் மாற தேவனை முழுஇருதயத்தோடே தேடி பாடித்துதித்தார்கள். தாவீது ராஜா தம் மக்களை, உங்கள் சத்தத்தை உயர்த்தி, உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும்படி பாடுங்கள் என்றான். யாக் 5:13-ல் உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன், ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன் என்கிறார். நாமும் பாடித்துதி செய்யும்போது நமது கட்டுகள் கழன்றுபோகும், கதவுகள் திறக்கப்படும் மகிழ்ச்சியினால் நாமும் நிரப்பப்படுவோம்.

## ஜெபிக்கும் போது மகிழ்ச்சி

எல்லாம் நன்றாய் நடக்கும்போது நாம் மகிழ்கிறோம். ஆனால் எதிராய் வரும்போது, திடீரென்று துன்பம் சூழும்போது மகிழ்ச்சி பாதிக்கப்பட்டு கலங்குகிறோம். என்ன செய்வது, யார் நம்மை விடுவிப்பார், யார் நம்மை காப்பாற்ற முடியும்? எங்கே போவேன் என்று கண்ணீர் சிந்துகிறோம். போராட்டங்கள் நடுவில் எதிர்நீச்சல் போட்டு தப்புவோமா? பிழைப்போமா என்று புலம்புகிறோம். அப்படிப்பட்ட நிலையில் தான் இந்த ஜனங்கள் எஸ்தரின் நாட்களில் இருந்தார்கள். இதைப்பற்றிக் கொஞ்சமும் தெரியாமல் அரண்மனையில் சுகபோகமாய் எஸ்தர் வாழ்ந்து கொண்டிருந்தாள். வெளியே மொர்தெகாயும், யூத ஜனங்களும் கலங்கினார்கள். எஸ்தர் 4:1-3-ல் மொர்தெகாய் துயரமுள்ள மகா சத்தத்துடனே அலறிக்கொண்டு, அரண்மனைக்கு முன் வந்தான். யூதருக்குள்ளே மகா துக்கமும், உபவாசமும், அழுகையும், புலம்பலும் உண்டாகி, அநேகர் இரட்டுடுத்தி சாம்பலில் கிடந்தார்கள். எவ்வளவு வேதனையான சூழ்நிலை பாருங்கள். இந்த மாதிரிதான் நாமும் பல வேளைகளில் கடந்து போகிறோம்.இந்த நிலையில் மொர்தெகாயின் சொல் கேட்டு எஸ்தர் ராஜாவினிடத்தில் தங்கள் நிலையை எடுத்துச் சொல்கிறாள். ராஜா மிகவும் நேசித்த எஸ்தரின்



வேண்டுதலைக் கேட்டு, சாக வேண்டிய நேரத்தில் வாழ்வு உண்டானது. சூழ்நிலை தலைகீழாக மாறினது. தூக்குமரம் செய்த ஆமான் அதில் தூக்கிப்போடப்பட்டான். மரணத்துக்கு குறிக்கப்பட்ட மொர்தெகாய் ஆமானாலேயே கனப்படுத்தப்பட்டான். எஸ்தர் 8:16-ல் இவ்விதமாய் யூதருக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், கனமும், களிப்பும் உண்டாயிற்று. எஸ்தரின் ஜெபம் ராஜா சமூகத்தில் பிரவேசித்து செய்த வேண்டுதல் பெரிய மகிழ்ச்சியைக் கொண்டு வந்தது. சங் 30:11-ல் என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர். என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக, நீர் என் இரட்டைக்களைந்து போட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால். என்னை இடைகட்டினீர் என்று தாவீது சொல்கிறான். நம்முடைய எந்த சூழ்நிலையாய் இருந்தாலும் நம் ராஜா இயேசு சூழ்நிலைகளை மாற்ற முடியும் என்று நாமும் அவரிடம் ஜெபம் பண்ணினால் கட்டாயம் நாம் கடந்து வரும் பாதையை மகிழ்ச்சியாய் மாற்றுவார்.

## செவிகொடுக்கும் போது மகிழ்ச்சி

நாம் நமது பிள்ளைகளைப் பார்த்து, சொல்லுகிறதை கேளு என்று சொல்கிறோம் நம் ஆண்டவரும் நம்மைப் பார்த்து எனக்கு செவிகொடுங்கள் என்கிறார். ஏசாயா 55:2-ல்..... நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து, நலமானதைச் சாப்பிடுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும் என்கிறார். யாத் 16:20-ல் மோசேயின் சொல் கேளாமல், சிலர் அதில் விடியற்காலம் மட்டும், கொஞ்சம் மீதியாய் வைத்தார்கள். அது பூச்சி பிடித்து நாற்றமெடுத்தது. அவர்களின் மேல் மோசே கோபங்கொண்டான். ஆண்டவர் வானத்திலிருந்து மன்னாவை அனுப்பினார். இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக் கொடுத்த அப்பம். இதை உங்கள் வீடுகளில் இருக்கிற நபர்களுக்கு ஏற்ப நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். அடுத்த நாளில் அதில் மீதம் வைக்கக்கூடாது என்று சொல்லியிருந்தும், சிலர் அதை கேட்கவில்லை. அது பூச்சி பிடித்து நாற்றமெடுத்தது. ஓய்வுநாளில் இந்த அப்பம் வராது, முந்தின நாளே உங்களுக்கு வேண்டியதை சேர்த்துக்கொள்ளுங்கள்

என்று சொல்லியும், சிலர் ஓய்வுநாளில் அதை சேர்க்கப் புறப்பட்டார்கள். சொல் கேட்காத, கீழ்ப்படியாமை உள்ள இஸ்ரவேலர். சவுலின் வாழ்க்கையில் அமலேக்கியரை அழித்துவிடு என்று கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். ஆனால் 1 சாமு 15:19-ல் இப்படியிருக்க, நீர் கர்த்தருடைய சொல்லைக்கேளாமல், கொள்ளையின்மேல் பறந்து, கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தது என்ன என்று சாமுவேல் கேட்டான். கீழ்ப்படியாமை மட்டுமல்ல. செவிகொடாமல் கொள்ளையின்மேல் பறந்தான், ஆசை வைத்தான். நம்முடைய வாழ்விலும் மாம்சசிந்தை தேவனுக்குக் கீழ்ப்படியக் கூடாதபடி, செவி கொடுக்காதபடி தடை செய்கிறது. ரோமர் 8:7-ல் மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை. அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது என்று பவுல் எழுதுகிறார். எபி 11:31-ல் விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுக்காரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடே கூட சேதமாகாதிருந்தாள் என்று வாசிக்கிறோம். இன்றைக்கு நமக்கு வேதம், நம்முடைய கைகளில் கொடுக்கப்பட்டு, கணக்கற்ற கட்டளைகள் தரப்பட்டிருக்கிறது. இவையெல்லாவற்றிற்கும் கவனமாய் செவிகொடுத்து கீழ்ப்படிய அர்ப்பணிப்போம். அப்போது மகிழ்ச்சியடைவோம். யூதா 1:24-ல் வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவருமான கர்த்தர். அவரது மகிமையுள்ள சந்நிதானத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடே குறையில்லாமல், கறையில்லாமல் நிறுத்த வல்ல தேவனைச் சார்ந்து கொள்வோம்.

"இதுவரை பாடுகள், உபத்திரவங்கள், கண்ணீர், வேதனை, சிறையிருப்பு என்று கலங்கிக்கொண்டிருக்கிற நம்மை களிகூருதலாகவும், மகிழ்ச்சியாகவும் அவரே நம்மை சிருஷ்டிக்கிறார்"

## சிறையிருப்பு மாறும் போது மகிழ்ச்சி

நாம் மேலே வாசித்த வார்த்தைகள் எல்லாவற்றிலும் சில காரியங்கள் செய்யாதிருக்கும்போது அல்லது செயயத்தவறும் போது, பல பாதிப்புகளை நாம் சந்திக்கிறோம். பாவச்சிறையில், சாபச்சிறையில், சத்துருவின் சிறையில் அகப்படுகிறோம். அந்த சிறையிருப்பிலிருந்து ஒருவர் நம்மை விடுவித்தால் எத்தனை மகிழ்ச்சி. சங் 14:7-ல் சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வருவதாக, கர்த்தர் தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பும்போது, யாக்கோபுக்குக் களிப்பும், இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும். தேவன் நம்முடைய சிறையிருப்பைத் திருப்பும்போது நமக்கு மகிழ்ச்சி உண்டாகும். அதனால் தான் சங் 92:4-ல் கர்த்தாவே, உமது செய்கைகளால் என்னை மகிழ்ச்சியாக்கினீர். உமது கரத்தின் கிரியைகளினிமித்தம் ஆனந்த சத்தமிடுவேன் என்று சங்கீதக்காரன் சொல்கிறதைப் பார்க்கிறோம். தமது ஜனமாகிய நமது சிறையிருப்பை தேவன் திருப்பி, நமக்கு களிப்பும் மகிழ்ச்சியும் தந்து அவரது கிரியைகளால் நம்மை மகிழ்ச்சியாக்குவார். நாம் ஆனந்த சத்தமிடும் கிரியைகளை நமக்கு செய்வார். அத்தனை சிறையிருப்பும் மாறும். ஏனென்றால் சிறையிருப்பைத் திருப்புவது மனிதனல்ல, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் கொண்டவர் நம் கர்த்தர், அவர் தான் நம் சிறையிருப்புகளை திருப்பி நம்மை மகிழ்ச்சியாக்குகிறவர். ஏசாயா 65:18-ல் நான் சிருஷ்டிக்கிறதினாலே நீங்கள் என்றென்றைக்கும் மகிழ்ந்து, களிகூர்ந்திருங்கள். இதோ, எருசலேமைக் களிகூருதலாகவும், அதின் ஜனத்தை மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறேன் என்று ஆண்டவர் நம்மை களிகூருதலாகவும், மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறார். எத்தனை மகிழ்ச்சி, இதுவரை பாடுகள், உபத்திரவங்கள், கண்ணீர், வேதனை, சிறையிருப்பு என்று கலங்கிக்கொண்டிருக்கிற நம்மை களிகூருதலாகவும், மகிழ்ச்சியாகவும் அவரே நம்மை சிருஷ்டிக்கிறார். இதுவரை நெகிழப்பட்ட, கைவிடப்பட்ட, ஒடுக்கப்பட்ட, சிறைப்பட்டு இருக்கிற நம்மை தேவன் எல்லா சிறையிருப்பிலிருந்தும் விடுவித்து நம்மை மகிழ்ச்சியாக வைப்பேன் என்கிறார். என் ஆண்டவர் தாமே இதை வாசிக்கிற ஒவ்வொருவரையும் மகிழ்ச்சியாக வைப்பாராக.






# நான் உங்களுடனேகூட இருக்கிறேன்

பிரேமா டேவிட்

இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன். மத் 28:20.

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே, வாக்குப்பண்ணினதை நிறைவேற்ற வல்லவரும், உண்மையுள்ளவருமாகிய நம் ஆண்டவர் இயேசுவின்நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த ஆண்டுகளிலே நீங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக, அவர் செய்த சகல உபகாரங்களுக்காகவும் நன்றி செலுத்துங்கள். ஸ்தோத்திரத்தினாலே கிருபை பெருகும், ஸ்தோத்திரம் செய்தலே தகுந்தது. 2 கொரி 4:15 எபே 4:4. எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் நன்றி செலுத்த வேண்டும். நீங்கள் கடந்துவந்த எல்லா கஷ்டங்களுக்காகவும், கண்ணீர்களுக்காகவும் நன்றி செலுத்துங்கள். சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். ரோமர் 8:28. எனவே யோபுவைப் போல இழப்பின் மத்தியிலும் பிள்ளைகள், உடைமைகள், சுகமெல்லாம் இழந்ததற்காகவும் ஆண்டவரை ஸ்தோத்தரித்தார். இழந்த எல்லாவற்றையும் இரட்டிப்பாய் பெற்றுக் கொண்டார். "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்". அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்த தேவனுடைய சித்தமாயிருக்கிறது.1 தெச 5:18. 430 வருஷம் எகிப்தில் அடிமைப்பட்டிருந்த இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயின் தலைமையில் கானானை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது மிகவும் வயதான மோசே ஜனங்களைப் பார்த்துசு சொன்னார்



நீங்கள் பலங்கொண்டு திடமனதாய் இருங்கள். பயப்படவும், திகைக்கவும் வேண்டாம், உன் தேவனாகிய கர்த்தர் தாமே உன்னோடேகூட வருகிறார். அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, கர்த்தர் சொன்னபடியே யோசுவா உனக்கு முன்பாகக் கடந்து போவான். உபா 31:6,3. பின்பு யோசுவாவை நோக்கி கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடேகூட இருப்பார், அவர் உன்னைவிட்டு விலகுவதில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை, நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்.

"யோசுவாவோடுகூட இருந்தார்"

கர்த்தர் மோசேயை நோக்கி இதோ, நீ மரிக்குங்காலம் சமீபித்திருக்கிறது. நான் யோசுவாவுக்கு கட்டளை கொடுக்கும்படி அவனை அழைத்துக்கொண்டு ஆசரிப்புக் கூடாரத்தில் வந்து நில்லுங்கள் என்றார். உபா 31:14. கர்த்தரின் தாசனாகிய மோசே, கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்த பின்பு யோசுவாவுக்குள்ளே ஒரே கலக்கம், பயம்! எப்படி 7 ஜாதிகளை, 31 ராஜாக்களை ஜெயித்து கானானை சுதந்தரிப்பது, இந்த ஜனங்கள் மோசேயிடமே முறுமுறுத்து இறைச்சிக்காக சண்டை போட்டாங்களே. இவர்களை எப்படி நடத்துவது, எப்படி போஷிப்பது. இதுவரைக்கும் வானத்து மன்னா, கற்பாறையிலிருந்து தண்ணீர் எல்லாம் கிடைச்சுதே என்ற கேள்விகளோடு இருந்த போது தான் கர்த்தர் யோசுவாவை நோக்கி நீ உயிரோடு இருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை, நான் மோசேயோடு இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன் நான் உன்னை விட்டுவிலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. நான் உனக்குக் கட்டளையிடவில்லையா?.

திடமனதாயிரு. திகையாதே கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். தேவன் தன்னோடும் ஜனங்களோடும் இருக்கிறார் என்ற பெரிய பலத்தோடே யோர்தானைக் கடந்து எரிகோவை வீழ்த்தி, பல பட்டணங்களைப் பிடித்து, கானானை சொந்தமாக்கி எகிப்திலே அடிமையாய் வனாந்தரத்திலே அலைந்து திரிந்தவர்கள், அகதிகளாய் ஆங்காங்கே குடியிருந்தவர்கள், இப்போது அமைதியோடும், ஆனந்தத்தோடும் அங்கே குடியேறினார்கள். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் யோசுவாவின் வாயை விட்டுப்பிரியாமலும், அவைகளின்படியெல்லாம் செய்வதிலே அவர் கவனமாயும், வலது இடதுபுறம் விலகாமலும் இருந்தார். அவர் காரியம் எல்லாம் வாய்த்தது. புத்திமானாயும் நடந்து கொண்டார். யோசு 1:7,8. யோசுவாவோடிருந்த தேவன் உங்களோடிருப்பார். யோசுவாவின் சந்ததியாகிய நீங்கள் தேவனுடைய வார்த்தையை தினமும் வாசித்து, தியானித்து கடைபிடியுங்கள். உங்கள் காரியமெல்லாம் வாய்க்கும்.

> “சீஷர்களோடு கூட இருந்தார்”

யோவான் 16:20-ல் இயேசு உவமைகளாய் சொன்னதெல்லாம் நிஜமாகவே நடந்து தன்னை அனுப்பினவரிடத்திற்குத் திரும்பிப் போகப்போகிறாரே என்ற துக்கத்திலும், இயேசுவை நம்பியிருந்தோமே அவருக்கே இப்படி நேர்ந்துவிட்டதே, நாம் அவரை விட்டுவிட்டோமே, எப்படியாவது அவரை சிலுவையில் அறையவிடாமல் தடுத்திருக்கலாமே என்ற கலக்கத்திலும், பயத்திலும், குற்றவுணர்விலும் இருந்த தன் சீஷர்களை நோக்கி தான் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னே சொன்ன வார்த்தையைத்தான், உங்களுக்கும் சொல்லுகிறார். நான் உங்களோடுகூட இருக்கிறேன். மத் 28:20. மலையைப் போல நீங்கள் நம்பியிருந்தவர்கள், குன்றுகளைப்போல அசையாதவர்களாய் உங்களோடு எப்பொழுதும் இருந்த மனிதர், பொருட்கள் உங்களை விட்டு விலகினாலும், பெயர்ந்து போனாலும் (ஏசாயா 54:10) உங்களை விட்டு விலகாமல் எப்பொழுதும் உலகத்தின் முடிவு வரை, உங்கள் உயிருள்ள இருக்கிறேன் என்று அன்புத்தம்பி, தங்கையே உன்னிடம், உங்களிடம் தான் சொல்லிக் கொண்டிருக்கிறார். உலகம் போகிற போக்கைப் பார்த்தால் என் எதிர்காலம், என் படிப்பு, வேலையெல்லாம் என்ன ஆகுமோ தெரியவில்லை. என் விருப்பம், விண்ணப்பம் நிறைவேறுமா? என்றும், தாய், தந்தையையோ, சகோதர, சகோதரியையோ யாரையோ, எதையோ இழந்து நிற்கிற உங்களைப் பார்த்துதான் இதோ, ( இதோ, என்றால் இங்கே பாருங்க, இங்கே என்னைப் பார்), நான் உன்னுடனே இருக்கிறேன். இந்த உலகம் முடியும் வரை, உங்கள் உயிர் இருக்கிற வரை உங்களோடு அவர் இருப்பதால், என்னை நடத்திடும் தேவன் என்னோடிருக்க பயமே எனக்கில்லையே என்று பாடிப்பாடி இனிவரும் நாட்களை கடந்து செல்லுங்கள். சீஷர்களோடு கூடவேயிருந்து உலகெங்கும் சாட்சிகளாய் நிறுத்தினார். அவர்களும் அவருடைய கட்டளையின்படியே ஆண்டவருடைய சுவிசேஷத்தைக் எல்லாருக்கும் கூறி ஞானஸ்நானம் கொடுத்து, சீஷர்களாக்கி இயேசுவின் சந்ததிகள் தோன்றுவதற்கு காரணமாகினார்கள். நாமும் அந்த சந்ததிகளில் ஒருவராக, இயேசுவின் சந்ததிகளை உருவாக்க கட்டளை பெற்றிருக்கிறோம். உங்கள் குடும்பத்தில், பள்ளியில், அலுவலகத்தில் உங்களோடு இருக்கும் இயேசுவைப்பற்றி சொல்வீர்களா?. மத்28:18-20, மாற் 16:15-20. பரலோகம் சென்ற இயேசு மீண்டும் வரப்போகிறார். அவர் எங்கே இருக்கிறாரோ அங்கே அவருடனேகூட எப்பொழுதும் நாம் இருக்கும்படியாக (யோவான் 14:3, 17:24) நம்மை அழைத்துச் செல்ல சீக்கிரம் வரப்போகிறார். எனவே ஆயத்தமாகுங்கள், ஆயத்தமாக்குங்கள். (எசே 38:7) கர்த்தர் தாமே உங்களுடனேகூட எப்பொழுதும் இருப்பாராக. .





# இயேசுவிடம்

## உன்னைக்கொடு



சிறுவர் பகுதி

அன்பான குட்டிபிள்ளைகளே...என்ன நல்லாயிருக்கீங்களா?

ஒருமுறை இயேசப்பா ஒருமலைப் பகுதியிலிருந்துப் பிரசங்கம் பண்ணிகிட்டு இருந்தார். முதல்ல கொஞ்சம் பேர்தான் இருந்தாங்க, அதற்கப்பறம் எல்லாருக்கும் சாப்பாடு கொடுத்து அனுப்பனும்னு இயேசப்பா நினைச்சாரு, அதனால் தன்னோடே சீஷர்களைக் கூட்பிட்டு, நீங்களே இவங்களுக்கு சாப்பாடு கொடுங்கனு சொன்னாரு. 200 ரூபாய்க்கு அப்பம் வாங்கினா கூட இவங்களுக்கு பத்தாதே என்ன செய்றதுன்னு சீஷர்கள் பேசிக்கிட்டு இருந்தாங்க. அதைப் கேட்டுக்கிட்டு இருந்த ஒரு சின்னப்பையன், ‘அண்ணே, அண்ணே என்னிடம் 5 அப்பமும் 2 மீனும் இந்தா இருக்குது, எடுத்துக்கோங்க அண்ணே, ஆனால் இவ்வளோ.... பேருக்கு இது எப்படி பத்தும்?-னு’ சொன்னான். அந்த 5 அப்பத்தையும், 2 மீனையும், எடுத்துக்கிட்டு, அந்தச் சின்னப்பையனையும் கூட்டிக்கிட்டு இயேசப்பாவிடம் சீஷர்கள் போனாங்க. இயேசப்பாவும் அந்தச் சின்னப் பையனுக்கிருந்த கொடுக்கிற குணத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டு அவனைப் பாராட்டினார். அதற்கப்பறம் அந்த அப்பத்தையும், மீனையும் எடுத்து ஸ்தோத்திரம்பண்னி ஆசீர்வதித்தார். அவருடைய வல்லமையாலே அந்த ஐந்து அப்பமும், இரண்டு மீனும் 5000 பேரு சாப்பிடற அளவுக்கு நிறைய வந்துருச்சு. எல்லாரும் நல்லா சாப்பிட்டு மிச்சமும் 12 கூடை நிறைய எடுத்தாங்க. அந்த சின்னப்பையன் தன்னிடம் இருந்ததை இயேசப்பாகிட்ட கொடுத்ததால எவ்வளவு பேரு சாப்பிட்டாங்க பார்த்தியா.

தம்பி, தங்கச்சி, நீயும் உன்னை,உன்னுடைய காசு, நேரம், பணம், திறமை, உன் வாழ்கையையே இயேசப்பா கிட்ட கொடுப்பியா?

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா, என் இருதயம், என் நேரம், பணம், திறமை எல்லாத்தையும் உங்களுக்கு தர்றேன். இயேசப்பா நீங்க என்னை ஆசீர்வதியுங்க. எங்க தேவைகளை எல்லாம் சந்தியுங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

## மனப்பாட வசனம்

கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். லூக்கா 6:38

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.. 2 கொரிந்தியர் 9:7






**1.சகோதரி. எலிசபெத். திண்டுக்கல்.**

எனது மகன் விபத்துக்குள்ளாகி மிகவும் மோசமான நிலையில் திண்டுக்கலில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். இவர் இருக்கும் நிலையில் இங்கு வைத்து வைத்தியம் பார்க்க முடியாது என்று சொல்லி மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சொல்லுங்கள் என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். இங்கும் சரியாக பார்க்காமல் காலில் மாவுக்கட்டைப் போட்டுவிட்டு 15- நாள் கழித்து வாருங்கள் என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். பிறகு வேறு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கும் 4-நாட்களே பார்த்துவிட்டு எங்களால் பார்க்க முடியாது என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். பிறகு மதுரை வேலம்மாள் மருத்துவமனைக்குச் சென்றோம். அங்கு உங்கள் மகன் காலை எடுக்க வேண்டும் மிகவும் மோசமாக உள்ளது என்று சொல்லி விட்டார்கள். அப்பொழுது நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சகோதரர், மற்றும் சகோதரியிடம் என் மகன் காலை எடுக்காமல் அவனுக்கு தேவன் பரிபூரண சுகம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி ஜெபிக்கக் கேட்டுக் கொண்டேன். இருவரும் என் மகனுக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள் தேவன் ஜெபத்தைக் கேட்டார். எடுக்க வேண்டும் என்று மருத்துவர்கள் சொன்ன காலை தேவன் சுகமாக்கினார். தற்போது நல்ல சுகத்தோடு இருக்கிறான். இயேசப்பாவுக்கு ஸ்தோத்திரம்.

**2.சகோதரர். எபிரோன் கனகராஜ். கோவை.**

எனது நுரையிரலில் இரத்தம் கட்டிகட்டியாக நின்றுவிட்டது. நுரையீரலில் 94 சதவீதம் பிரச்சனையாக இருந்தது. என் சரீரத்தில் என்ன பிரச்சனை என்பதை பரிசோதனை செய்து கண்டுபிடிக்கவே சுமார் 8 மாதங்களாயின. பல மருத்துவமனைக்குச் சென்றும் மருந்து மாத்திரை சாப்பிட்டும் சரியாகவில்லை. மிகவும் மனமுடைந்து போன நிலையில் என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பி நின்ற நிலையில் கடந்த மார்ச் மாதம் வானத்தின் வாசலில் நடந்த உபவாச கூட்டத்தில் வந்து கலந்து கொண்டோம். அன்று ஜெபவேளையில் நுரையீரல் பாதிப்பிற்காகவும், இரத்தக்கட்டிகள் சம்மந்தமான பிரச்சனையில் உள்ளவர்களுக்கு தேவன் சுகம் தருகிறார் என்று சொல்லி ஜெபித்தார்கள். அப்பொழுதே இந்த தேவ வார்த்தை எனக்குத் தான் என்று நான் விசுவாசித்தேன். ஜெபத்தில் இணைந்து நான் ஜெபித்தேன். அப்பொழுதே தேவன் என்னைத் தொட்டார், என் சரீரத்தில் ஒரு மாற்றம் வந்தது, நான் சுகமானதை உணர்ந்தேன். தற்போது நான் எந்த மருந்தும் மாத்திரையும் சாப்பிடவில்லை. எந்த தொந்தரவும் எனக்கு இல்லை. எனக்கு சுகம் தந்து அற்புதம் செய்த தேவாதி தேவனுக்கு கோடான கோடி நன்றி.

**3. சகோதரி. பாத்திமா மதுரை.**

எனது இரண்டாவது மகள் திருமண காரியம் பல ஆண்டுகளாக தடையாகவே இருந்தது. நாங்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சகோதரி. கலாவின்சென்ட்ராஜ் அவர்களிடம் ஜெபிக்குமாறு கேட்டுக் கொண்டேன். அவர்களும் என் மகளுக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள். தேவன் ஜெபத்தைக் கேட்டு நீண்ட ஆணடுகளுக்குப் பிறகு என் மகளுக்கு ஏற்ற துணையைத் தந்து திருமண கரியத்தை வாய்க்கச் செய்திருக்கிறார். ஜனவரி மாதம் திருமணம் நடைபெற தேவன் கிருபை செய்தார். இயேசப்பாவுக்கு ஸ்தோத்திரம்.





## நடப்பு செய்திகள்

### ஒமைக்ரான் சாதாரணமானது அல்ல உயிர்களை கொல்லக் கூடியது' புதிய எச்சரிக்கை வெளியிட்ட WHO

ஒமைக்ரான் வைரஸை நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. அது உயிர்களை கொல்கிறது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் ஏராளமானோர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். ஒமைக்ரான் குறித்த புதிய எச்சரிக்கை பதிவை உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்த வகையான வைரஸ் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது என்று பரவலாக பேசப்படும் நிலையில் உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.கொரோனா, பாதிப்பிலிருந்து உலக நாடுகள் மீண்டு வந்த நிலையில், ஒமைக்ரான் வைரஸ் பல்வேறு நாடுகளுக்கு பரவி மீண்டும் பொது முடக்கத்தை ஏற்படுத்தும் ஆபத்தை உருவாக்கியுள்ளது. தென்னாப்பிரிக்காவில் சில வாரங்களுக்கு முன்பு கண்டறியப்பட்ட இந்த வைரஸ், விறுவிறுவென வேகமாக உலக நாடுகளுக்கு பரவி பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது இதன் காரணமாக இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் கட்டுப்பாடுகள் மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இரவு நேர ஊரடங்கு, வார இறுதி நாளான ஞாயிற்றுக் கிழமைகளில் முழு ஊரடங்கு உள்ளிட்டவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. கொரோனாவின் மற்ற வேரியண்ட்டுகள் உடன் ஒப்பிடும்போது ஒமைக்ரான் பெரிய அளவில் அச்சுறுத்தலை ஏற்படுத்தாது என்று பல்வேறு மருத்துவ வல்லுனர்கள் கூறியிருந்தனர். இருப்பினும் இதன் பரவல் உலக நாடுகள் மத்தியில் அச்சத்தை உருவாக்கி உள்ளது. இந்நிலையில் உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, 'ஒமைக்ரான் வைரஸை நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. அது உயிர்களை கொல்கிறது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் ஏராளமானோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அப்படியிருக்கையில் இந்த வைரஸை நாம் எப்படி சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியும்? ஒமைக்ரான் வைரஸின் பரவல் வேகம் நம்மை வியப்புக்குள்ளாக்கியுள்ளது. வாலிபர் பகுதி வைரஸின் பரவல் வேகம் நம்மை வியப்புக்குள்ளாக்கியுள்ளது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும்போது 71 சதவீதம் அளவுக்கு கொரோனா தொற்று பரவியுள்ளது. எனவே மக்கள் சுய கட்டுப்பாடுடன் அந்தந்த நாடுகளின் அரசுகளுக்கு முழு ஒத்துழைப்பு தர வேண்டும். இதனை செய்தால் மட்டுமே, நாம் இந்த பெருந்தொற்றில் இருந்து விடுபட முடியும்.இவ்வாறு உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

OMICRON

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai

## இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

### 1) BANK TRANSFER

| | | | |
|---|---|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST | A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : KOCHADAI MADURAI | BRANCH | : MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA | BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 493902010001022 | A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UBIN0549398 | IFSC CODE | : UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**
WWW.JESUSLIVES.IN

**3) காசோலை(CHEQUE)**
JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333

**5) மணியார்டர்(E.M.O) :** இயேசு வாழ்கிறார் 54/ பேங்க் காலனி -ஏ
பரவை ,மதுரை-625402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2021-2023
WPP Registration No. TN/WPP-40/SR/2021-2023
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S







**TO:**

If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.